PERMANENT REFERENCE

# A Feasibility Analysis on Establishing a Dairy Farm in the M/Puthukkudiyiruppu Divisional Secretariat Division

PR
636.214 20FR
L09

KANDIAH LOGAVINTHAN

FCM654
Project Report
Library - EUSL

Department of Commerce
Faculty of Commerce and Management
Eastern University
Sri Lanka.

2003

# பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| ஆய்வின் சுருக்கம் | I |
| நன்றியுரை | II |
| அட்டவணை பட்டியல் | III |
| வரைபட பட்டியல் | IV |
| அத்தியாயம் 1<br>அறிமுகம் | 01-09 |
| அத்தியாயம் 2<br>நூலாய்வு | 10-30 |
| அத்தியாயம் 3<br>ஆய்வுப்பின்னணியும் பால் பயன்பாட்டு நிலையும் | 31-57 |
| அத்தியாயம் 4<br>தரவு பிரதிநிதித்துவம் | 58-85 |
| அத்தியாயம் 5<br>தரவு பகுப்பாய்வு | 86-103 |
| அத்தியாயம் 6<br>மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் பாற்பண்ணை அமைப்பதில் உள்ள பிரச்சனைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் | 104-113 |
| பின்னிணைப்பு | |
| வினாக்கொத்து | V-XI |
| யாலுணவுப் பொருட்களின் செய்முறை | XII-XVI |
| இலாப நட்ட கூற்று | XVII |
| உசாத்துணை நூல்கள் | XVIII |

## ஆய்வின் சுருக்கம்

இவ்வாய்வானது மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் பாற்பண்ணை அமைப்பதற்கான சாத்திய வளத்தினை கண்டறிவதும் அதனை மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரச்சனைகளுக்கான தீர்வை முன்வைப்பதுமாக அத்தியாயங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி அறிமுகம், நூலாய்வு, ஆய்வுப்பின்னணியும் பால் பயன்பாட்டு நிலையும், தரவு பிரதிநிதித்துவம், தரவு பகுப்பாய்வு, மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் பாற்பண்ணை அமைப்பதில் உள்ள பிரச்சனைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் என ஆறு அத்தியாயங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

இவ்வாய்வுக்கான பிரச்சனைகளாக சந்தைப்படுத்தல் சாத்தியப்பாடு, உற்பத்தி தொழில்நுட்ப சாத்தியப்பாடு, நிறுவன ஒழுங்கமைப்பு சாத்தியப்பாடு, நிதிச் சாத்தியப்பாடு, சூழல் சாத்தியப்பாடு, உள்ளதா? என்பதை ஆராய்வதாக அமைகின்றது. இப்பிரச்சினைகள் ஒவ்வொரு சாத்தியப்பாடுகள் ஊடாக எழுந்தாலும் அவை சிறந்த பாற்பண்ணை அமைப்புக்கான தீர்வாக அமைகின்றது.

மேலும் இவ்வாய்வின் நோக்கம் பாற்பண்ணை அமைப்பது தொடர்பான சாத்திய வள அறிக்கை தயாரித்தல் ஆகும். இந் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முகமாக முன்வைக்கப்பட்ட பல்வேறு விடயங்களும் தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

இறுதியாக இவ்வாய்வு மூலம் மு/புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் பாற்பண்ணை அமைப்பதற்கு வேண்டிய அனைத்து சாத்தியங்களும் உள்ளமை வெளிப்படையாகின்றது. மேலும் இவ்வமைப்பின் மூலம் இப்பிரதேசத்தின் பாலுணவு தேவை பூர்த்தியாகும் என்பதில் ஐயமில்லை. இவ் விடயம் சம்பந்தமாக வேறு பல ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு பயன் தரும் வகையில் அமையுமானால் அது இவ்வாய்வின் வெற்றியாக அமையும் என எண்ணுகின்றேன்.

-ஆய்வாளன்-